## நீங்கள் கொண்டு வர வேண்டியவை:

**முடிந்தவரை, இதில் குறிப்பிடப்பட்ட பல ஆவணங்களை:**

- விசா ஆவணங்கள்
- அடையாள ஆவணங்கள்
- வங்கி அறிக்கைகள் (மருந்தக ஆதரவுக்காக)
- மருத்துவ ஆவணங்கள்

## பிற இலவச சுகாதாரச் சேவைகள்

**விக்டோரிய அரசாங்கத்தின் அறிவுறுத்தலின்படி, விக்டோரியாவில் புகலிடம் கோரும் அனைத்து மக்களும், உங்களிடம் மெடிகேர் இருந்தாலும் இல்லாவிட்டாலும், இலவச பொதுச் சுகாதாரச் சேவைகளைப் பெற உரிமை உண்டு.**

பொதுச் சுகாதாரச் சேவைகளில் பின்வருவன அடங்கும்:

- பொது மருத்துவமனைகள்
- அவசரகாலச் சூழ்நிலைகளில் ஆம்புலன்ஸ் சேவைகள்
- சமூகச் சுகாதாரச் சேவைகள்
- மனநல ஆதரவு
- பல் சுகாதாரச் சேவைகள்
- விடுபட்ட தடுப்பூசிகளை இடுதல்

உங்களுக்கு ஏதேனும் நோயியல் (pathology) அல்லது படமெடுத்தல் (imaging) சோதனைகள் தேவைப்பட்டால், தயவுசெய்து எங்களை வந்து பார்க்கவும்.

நீங்கள் பெற்றுக்கொள்ள உரிமையுள்ள இலவச சுகாதாரப் பராமரிப்பைப் பெற எங்கள் உதவி உங்களுக்குத் தேவைப்படலாம். உங்களுக்கு மருத்துவமனையிலோ அல்லது பிற சுகாதாரச் சேவையிலோ மருத்துவப் பராமரிப்பு மறுக்கப்பட்டிருந்தால், அல்லது உங்களுக்குக் கட்டணம் விதிக்கப்பட்டிருந்தால், தயவுசெய்து எங்களை வந்து பாருங்கள்.



ASRC-இல் LGBTQIA+ சமூகமும் உள்ளடங்கும்

# சுகாதார நிகழ்ச்சித்திட்டம்

**திங்கள், செவ்வாய், வியாழன் மற்றும் வெள்ளி**
**(புதன்கிழமை மூடப்பட்டிருக்கும்)**

காலை 10:30 - மாலை 4:00 மணி வரை

03 9274 9898

health@asrc.org.au

மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்த்துரைப்புச் சேவைகள்




நாம் வாழும், கல்வி பயிலும் மற்றும் தினமும் வேலை செய்யும் நிலங்களின் முதற்குடிகள் மற்றும் பாரம்பரியப் பாதுகாவலர்களாகப் பூர்வீகக் குடியினர் மற்றும் டோரஸ் நீரிணைத் தீவு மக்களை நாம் அங்கீகரிக்கின்றோம். அவர்களுக்கும், அவர்களின் வழக்கங்களுக்கும், கலாச்சாரத்திற்கும், கடந்தகால மற்றும் நிகழ்காலப் பெரியவர்களுக்கும் நாங்கள் எங்கள் மரியாதையைச் செலுத்துகிறோம். முதற்குடிகளின் (பழங்குடியினர் மற்றும் டோரஸ் நீரிணைத் தீவு மக்கள்) இறையாண்மையும் நிலங்களும் ஒருபோதும் விட்டுக் கொடுக்கப்படவில்லை என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். இந்த நிலம் எப்போதும் பூர்வீகக் குடிகளின் நிலமாகவே இருந்தது, எப்போதும் இருக்கும்

# எங்கள் சுகாதாரச் சிகிச்சையகத்தில் நாங்கள் வழங்கும் சேவைகள்

**பல் மருத்துவம்**

தேவைக்கேற்ப ராயல் பல் மருத்துவமனை அல்லது சமூகச் சுகாதாரச் சேவைகளுக்கு பல் மருத்துவப் பரிந்துரைகளுக்கான உதவி.

**சுகாதாரக் கல்வி**

சுகாதாரப் பிரச்சினைகளைத் தடுப்பதற்கான திறன்களையும் அறிவையும் வழங்கும் வழக்கமான திட்டங்கள்.

**மருத்துவச் சந்திப்பு முன்பதிவுகள்**

ASRC Health-இல் பெரும்பாலான நாட்களில் ஒரு மருத்துவர் இருப்பார்.உங்களிடம் மெடிகேர் இல்லையென்றால், முன்பதிவு செய்து
ASRC Health-இன் மருத்துவரை அணுகலாம்.
உங்களிடம் மெடிகேர் இருந்தால், ஒரு சமூக மருத்துவரை அணுகுவதற்கு எங்கள் ஆதரவைப் பெறலாம்.

**மருந்துச் செலவுகளுக்கு உதவி**

மருந்தகத் திட்டத்தில் சேர, உங்களுக்கு நிதி மதிப்பீடு தேவைப்படும். அதில் அவ்வப்போது 6 மாதங்களுக்கு ஒருமுறை 3 மாத வங்கி அறிக்கைகள் சமர்ப்பிப்பது அடங்கும்.

**தடுப்பூசிகள்**

நோய்த்தடுப்பு செவிலியர்கள் விடுபட்ட தடுப்பூசிகளை வழங்குகிறார்கள்.
வருடாந்திர காய்ச்சல் (flu) சிகிச்சையகம் உள்ளது.*
*முன்பதிவு அவசியம். மேலும் விவரங்களுக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

**செவிப்புலன் சோதனைகள்**

பொருத்தமான செவிப்புலன் சேவைகளுக்குப் பரிந்துரைப்பதில் உதவி.

**மன ஆரோக்கியமும் மனநல மருத்துவமும்**

உங்களிடம் மெடிகேர் இல்லாவிட்டாலும் கூட, நீங்கள் ஒரு மனநல மருத்துவரைப் பார்க்கலாம். எங்கள் மருத்துவர் உங்களுக்காக ஒரு பரிந்துரைக் கடிதத்தை எழுத முடியும்.

**செவிலியர் பராமரிப்பு**

செவிலியர்கள் தினமும் இருப்பார்கள். நாங்கள் ASRC மருத்துவர்களிடம் சந்திப்புகளை முன்பதிவு செய்யலாம் அல்லது பிற சுகாதார மற்றும் சமூக சேவைகளுக்கு உங்களைப் பரிந்துரைக்கலாம்.

**கண் பராமரிப்பு**

நாங்கள் மாதாந்திர கண் மருத்துவமனை நடத்துகிறோம். உங்களை வேத்தியர் பார்வை அளவையியல் கல்லூரிக்கு (Royal College of Optometry) பரிந்துரைக்க முடியும். கண்ணாடிகள், வில்லைகள் (lenses) மற்றும் மூக்குக் கண்ணாடி சட்டகங்களுக்கு (frames) $50 வரை நாங்கள் ஈடு செய்கிறோம்.

**பெண்களுக்கான சிகிச்சை**

இனப்பெருக்க ஆரோக்கியம் உட்பட பெண்களின் ஆரோக்கியம் தொடர்பான வடிகட்டல் சோதனைகள், தகவல்கள் மற்றும் சேவைகள்.

## பிற சேவைகள்

- **பாத மருத்துவம்**
- **உடற்கூறு சிகிச்சை மற்றும் எலும்பியல் சிகிச்சை (Physiotherapy & Osteopathy)**
- **அக்குபஞ்சர்**
- **உணவியல் நிபுணர்**
- **நீரிழிவு நோய் கல்வி**